www.kalviexpress.in

FTJ

முதல் இடைப் பருவத் தேர்வு – 2022

9 - ஆம் வகுப்பு

தமிழ்

பதிவு எண்.

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10 X 1 = 10

1. தமிழ் விடுதூது ..... என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.
   அ) ..... இனம் ஆ) வண்ணம் ..... இ) ..... குணம் ஈ) வனப்பு ..... .
   அ) மூன்று, நூறு, பத்து, எட்டு ஆ) எட்டு, நூறு, பத்து, மூன்று,
   இ) பத்து, நூறு, எட்டு மூன்று ஈ) நூறு, பத்து, எட்டு, மூன்று
3. படித்தாய் என்பது அ) எழுவாய் ஆ) ஒன்றா எழுவாய் இ) பெயரடை ஈ) வினையடை
4. மிசை - என்பதன் எதிர்ச்சொல் என்ன?
   அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை
5. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புனரி
6. **மல்லல்** மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

பாடலைப் படித்து பின்வரும்வினாக்களுக்கு விடை தருக.

தித்திக்கும் தெள்அமுதாய் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியே என் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படும்தேனே ..... .

7. இப்பாடல் வரிகள் இடம் பெற்ற நூல் எது
   அ) தமிழோவியம் ஆ) தமிழ் விடுதூது இ) பட்டமரம் ஈ) பெரிய புராணம்
8. இப்பாடலின் ஆசிரியர்
   அ) அறிய இயலவில்லை ஆ) சேக்கிழார் இ) தமிழ் ஒளி ஈ) சுரதா
9. முத்தமிழ் - ***விரித்தெழுதுக.***
   அ) நாடகம் இயல் ஆ) இயல், இசை நாடகம்
   இ) அறிவு, இசை நாடகம் ஈ) அறிவியல், நாடகம், இசை
10. அறிவால் உண்ணப்படும் தேன் எது?
    அ) மரம் ஆ) இசை இ) தமிழ் ஈ) விலங்கு

பகுதி - II (பிரிவு - I)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும். 3 X 2 = 6

11. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது?
12. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
13. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்புத் தருக.
14. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

Send Question Paper ,Answer Key-kalviexpress@gmail.com

www.kalviexpress.in

பிரிவு - 2

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க 3 X 2 = 6

15. *தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க*

அ) கல்லாடம் படித்தவரோடு ..... .

ஆ) இளமையில் கல்வி ..... .

16. *கலைச்சொல் தருக.* அ) Phoneme ஆ) Tropical Zone

17. *சொற்களைத் தொடர்களாக மாற்றுக.*

மொழிபெயர் - தன்வினை, பிறவினைத் தொடர்களாக மாற்றுக.

18. *பொருள் எழுதுக.*

அ) பாலி ஆ) செம்மல்

பகுதி - III (பிரிவு - 1)

III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

வினா எண். 21 க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2 X 3 = 6

19. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?

20. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

21. அடிபிறழாமல் எழுதுக.

காடெல்லாம் ..... எனத் தொடங்கும் பெரியபுராணப்பாடல்.

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2 X 3 = 6

22. துணைவினைகளின் பண்புகள் யாவை?

23. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக்காட்டுக.

24. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 2 X 4 = 8

25. உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் "கால்முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

26. **படம் உணர்த்தும் கருத்தை கவினுற எழுதுக.**



பகுதி - V

பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. 1 X 8 = 8

27. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க. ***(அல்லது)***

28. தண்ணீர் கதையைக் கருப்பொருள் குறையாமல் சுருக்கித் தருக.

Send Question Paper ,Answer Key-kalviexpress@gmail.com